<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**(Chapter XXII Code of Criminal Procedure)**</u>

<u>கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.</u>

| அமர்வு வழக்கு எண். | 51/2012 | அரசு தரப்பு | அ.சா.22 |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 1st day of October 2024.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவை மாவட்ட சைபர் கிரைம் பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07-11-2009 ஆம் தேதி கோவை மாநகர சிங்காநல்லூர் காவல் நிலைய கு.எண்.964/2009 வழக்கில் இ.த.ச. Man missing @ 302 மற்றும் 201 இதச வழக்கை எனக்கு முன்பாக பணியில் இருந்த ஆய்வாளர் திரு.வெற்றிச்செல்வன் மற்றும் ஆய்வாளர் திரு.கௌதமன் ஆகியோர்கள் விசாரணை செய்து வைத்த வழக்கினை நான் மேல் விசாரணைக்காக எடுத்துக் கொண்டேன். எனது விசாரணையின்போது இந்த வழக்கானது முதலில் Man missing ஆக சிங்காநல்லூர் காவல் நிலைய கு.எண்.964/2009 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது. பின்னர் அவினாசி காவல் நிலைய கு.எண்.1610/2009 சட்டப்பிரிவுகள் 302, 201 இ.த.ச. என்ற வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரிகளிடமிருந்து பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேலே குறிப்பிட்ட கு.எண்.964/2009 ல் காணாமல் போன

நபர்தான் அவினாசி குற்ற எண்.1610/2009 ல் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிய வந்தது. அது சம்மந்தமாக அவினாசி காவல் நிலைய அறிக்கையை நான் பெற்றேன். அறிக்கையைப் பெற்ற பின் சிங்காநல்லூர் காவல் நிலைய கு எண்.964/2009 வழக்கின் சட்டப்பிரிவுகளை 302, 201 இ.த.ச. வழக்காக மாற்றம் செய்து சட்ட மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 27-08-2010 தேதியிட்ட சட்ட மாறுதல் அறிக்கைதான் நீதிமன்றத்தில் கொடுத்ததாகும். அது அ.த.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27-08-2010 அன்றே இந்த வழக்கின் சாட்சிகள் சரண்யா மற்றும் இறந்துபோனவரின் சகோதரர் ராமதாஸ் இருவரையும் தனித்தனியே விசாரித்து மறுவாக்குமூலம் பெற்றேன். பின்னர் அதே நாள் சம்பவ இடத்திற்கு 14.30 மணிக்கு சென்று சாட்சிகள் பிரகாஷ்குமார் மற்றும் முருகேசன் இருவர் முன்னிலையில் புலன் விசாரணை மேற்கொண்டேன். மேற்சொன்ன சாட்சிகளின் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.6 பார்வை மகசர்தான் சம்பவ இடத்தில் சாட்சிகளின் முன்னிலையில் நான் தயார் செய்ததாகும். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்னர் 28-08-2010 அன்று திரு.ஏ.ஆர்.மோகன், தடய வட்டார அறிவியல் ஆய்வாளர், சென்னை அவர்களிடமிருந்து அ.த.சா.ஆ.11 ஆய்வறிக்கையைப் பெற்று அன்றைய தினமே அவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். பின்னர் 29-08-2010 அன்று சாட்சிகள் சத்தியா மற்றும் மதன் இருவரையும் தனித்தனியே விசாரித்து

மறுவாக்குமூலம் பெற்றேன். பின்னர் 16-09-2010 அன்று சாட்சிகள் செல்வராஜ், அந்தோணி, கனகராஜ் ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பெற்றேன். பின்னர் கடந்த 05-10-2010 ஆம் தேதி சின்னசாமி,சுப்பையன் ஆகிய சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். பின்னர் 07-12-2010 அன்று உதவி பதிவுத்துறை அலுவலர் கமலக்கண்ணன், வட்டார போக்குவரத்து அலுவலகம், மத்திய சென்னை அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 08-03-2011 ஆம் தேதி சி.பி.ரவிச்சந்திரன், வேதியல் ஆய்வாளர், ஆர்.எப்.எஸ்.எல், சென்னை அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்னர் 23-04-2011 ஆம் தேதி சேலத்தைச் சேர்ந்த மோகன் என்பவரிடம் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட பதிவு எண்.டி.என்.01-டி.8875 என்ற சான்ட்ரோ கார் இருப்பதாக கேள்விப்பட்டு அவரை விசாரித்தேன். பின்னர் எனக்கு பணிமாறுதல் வந்ததால் 29-06-2011 ஆம் தேதி பணிமாறுதலில் சென்று விட்டேன்.

<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் காணாமல் போன ராஜு என்பவர் கோயமுத்தூர் மணி மேல்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராக இருந்தவர் என்று சொன்னால், சரிதான். ஆனால் அவர் தமிழ் ஆசிரியராக இருந்தாரா என்று எனக்கு நினைவில்லை. அவர் காணாமல் போன சமயத்தில் அவர் பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால், எனக்கு சரியாக நினைவில்லை. அவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் உண்டு என்று சொன்னால், சரிதான். அதில் பெரிய பெண்ணுக்கு திருமணம் ஆகி விட்டது என்றால் சரிதான். காணாமல் போன சமயத்தில் இரண்டாவது பெண்

சென்னையில் வேலை செய்து கொண்டிருந்தார் என்றால், சரிதான். 07-11-2009 ல் ராஜு காணாமல் போய் விட்டார் என்று சொன்னால், சரிதான். ஆனால் புகார் 10-11-2009 ல் பதியப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எதனால் வழக்கு பதிய காலதாமதம் ஆனது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதியால் காலதாமதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு நபர் காணாமல் போய் விட்டதாக புகார் வந்தால் காவல் நிலையத்திலிருந்து தினசரி நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்படும் என்று சொன்னால், சரிதான். அதே போன்று இந்த வழக்கில் ராஜுவைப் பற்றி செய்தி தாளில் வெளியிடப்பட்டதா என்றால், ஆவணங்களைப் பார்த்தால்தான் கூறமுடியும். செய்திதாளில் போடப்பட்டதா என்று எனக்குத் தெரியாது. அது முதல் ஆய்வாளரைக் கேட்டால்தான் தெரியும். ஒரு நபர் காணாமல் போன புகார் வந்தால் அந்த தகவலை மற்ற காவல் நிலையங்களுக்கும் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் ராஜு காணாமல் போனதைப் பற்றி மற்ற காவல் நிலையங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டா என்றால், தெரியப்படுத்தப்பட்டது. வழக்கு பதிவு செய்யப்பட்ட அன்று தெரியப்படுத்தப்பட்டது. 08-11-2009 அன்று கோவை அவினாசி, பழங்கரை கிராமத்தில் குப்பை கொட்டும் இடத்தில் ஒரு சடலம் கண்டெடுக்கப்பட்டு அது சம்மந்தமாக அவினாசி காவல் நிலையத்தில் ஒரு புகாரும் பதிவானது என்று சொன்னால் சரிதான். அவினாசி காவல் நிலைய வழக்கை சிங்காநல்லூர் காவல் நிலைய வழக்குடன் சேர்க்க உயர் அதிகாரிகளின் ஒப்புதல் 25-08-2010-ல் வாங்கப்பட்டது. ஆனால் அந்த உத்திரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேலே குறிப்பிட்ட அவினாசி காவல்

நிலைய குற்ற எண்ணில் இறந்து போன நபரின் வயது சுமார் 30 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த புகாரானது இந்த வழக்கில் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ.3 ஒரு கிராம நிர்வாக அதிகாரி கொடுத்தது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் சம்மந்தப்பட்டதாகச் சொல்லப்படும் சான்ட்ரோ காரை கையகப்படுத்தப்படவில்லை என்று சொன்னால், எனக்கு முன்பிருந்த ஆய்வாளரைக் கேட்டால்தான் தெரியும். அந்த காரின் உரிமையாளரை நான் விசாரிக்கவில்லை. முந்தைய ஆய்வாளர்கள் விசாரித்தார்களா என்று எனக்குத் தெரியாது. அந்த காரின் உரிமையாளர் இந்த வழக்கின் முதல் எதிரி வெங்கடேஷ் என்று சாட்சி கமலக்கண்ணன் தெரிவித்தார். அ.சா.10 ராமதாஸை எங்கு வைத்து நான் விசாரித்தேன் என்றால், சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் வைத்துத்தான் விசாரித்தேன். நான் கூறுவது தவறு என்றும், சாட்சியை நான் சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் வைத்து விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ராஜுவின் பிரேத பரிசோதனை அறிக்கையை நான் பெறவில்லை. எனக்கு முந்தைய ஆய்வாளர் பெற்றார். நான் சரியாக இந்த வழக்கில் புலன் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/சுரேஷ்,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.